# தமிழ் மொழி அறிவியலுக்கு ஏற்ற மொழி

ஆர்.பக்கிரிசாமி.பி.இ.
ஓய்வு பெற்ற மின்சார பொறியாளர்
எ.எப் பிளாக்.2219 11வது மெயின் ஈரோடு.அண்ணாநகர், சென்னை-40.

ஒரு மொழிதான் ஒரு இனத்தை அடையாளம் காட்டுகிறது. இது யாவரும் அறிந்தது ஒன்று. நம் தமிழ் மொழி ஆயிரமாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த்து.பல சோதனைக்கு ஆளாகியது அவற்றையொல்லாம் தாண்டி இன்றும் வாழ்ந்து வளர்ந்துகொண்டு தான் இருக்கிறது. பலர் நினைக்கிறார்கள் தமிழ் பலரால் பேசப் படுவதில்லை. எழுதப் படுவதில்லை.. முக்கியமாக நகரங்களில் தமிழ் அதிகம் பேசப் படுவதில்லை எழுதப் படுவதில்லை., காலபோக்கில் தமிழ் காணாமல் போய்விடலாம், என்ற எண்ணம் பலருடைய எண்ணம். அது பொய்..பொய் பொய்

சமீபத்தில் பிரஞ்சு நாட்டில் நடந்த ஒரு மாநாட்டில் இன்னும் 100 ஆண்டு களுக்கு பிறகு உலகில் வாழும் மொழிகள் யாவை என்று கணக்கு எடுத்தார்களாம். அந்த கருத்து கணிப்பில் தமிழ் மொழி 100 ஆண்டுகளுக்கு பிறகு இந்தியாவில் இருக்காது என்று சொன்னார்களாம். இந்தி மொழி இருக்குமாம். பலரால் பலகாலம் ஒரு மொழி பேசப்பட வேண்டும். எழுதப்பட வேண்டும் அப்போதுதான் அம்மொழி அழியாமல இருக்கும் என்பது அவர்கள் கூற்று. நம் மொழி மேற்சொன்ன இலக்கணப்படி பார்த்தால் இதுகாறும் காணாமல் போயிருக்குமே.? அது அல்ல ஒரு மொழி வாழ்வதற்கும் அழிந்து போவதற்கும் காரணம் நோக்கின் ஒரு மொழி எல்லா சொய்திகளையும், எல்லா நுணுக்கங்களையும் சொல்ல வல்லதாக இருக்க வேண்டும். புதிய புதிய கலைகள் வழக்கில் வந்தாலும் அவைகளையும் அந்த மொழியில் சொல்ல வல்லதாய் இருக்கவேண்டும். அந்த மொழிதான் நிலைத்து நிற்கும் என்றென்றும் வாழும். இதுதான் உண்மை.

ஆங்கிலேயன் இந்தியாவை 150 அண்டுகள் ஆண்டபிறகு கூட தமிழ் அழியவில்லையே. தமிழ் தாத்தா உ.வே.சு ஐயர், திரு.மீனாட்சி சுந்தரம் பிள்ளை, தி.ரு.வி.க, போன்றோர் நம்மிடையே வாழ்ந்து தமிழை வளர்த்தார்கள் வாழவைத்தார்களே.!

பாரதி பாரதிதாசன் போன்றோர் நமக்கு கட்டளை இட்டார்கள். எட்டு திக்கும் செல்லுங்கள, பல நுண்ணிய கலைகளை கற்று வாருங்கள். அதனை தமிழில் செய்யுங்கள் என்று சொன்னார்கள். அதனை நம் இளைஞர்கள் சிரமேற்கொண்டு நடத்தி வருகிரார்கள நம் மொழியும் அதனை தன்னகத்தே ஏற்று காலத்திற்கு ஏற்றவாறு கணினியின் செயல்பாடுகளை மிகச்சுலமாக தமிழில் கையாளமுடிகிறதே ! அப்படி என்றால் தமிழ் எந்த நுணுக்கமாயிருந்தாலும் தன்னகத்தே ஏற்று செயலாற்ற முடியும் என்பதுதானே உண்மை..தமிழில் மென் பொருள்கள் நிறையவே வந்து விட்டன.

பல ஆயிர ஆண்டுகளுக்கு முன்பே தமிழில் பலப்பல விஞ்ஞான, அறிவியல் கருத்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதனை இங்கே காண்போம். தொல்காப்பியம் தமிழ் இலக்கண நூல். இரண்டாயிரம் ஆண்டு தொன்மைவாய்ந்தது அதில் விஞ்ஞான கருத்துகள் சொல்லப்பட்டிருக்கிருக்கின்றன. தமிழ் இலக்கியங்களில பல நூல்களில் அறவியல், விஞ்ஞான கருத்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

புல்லும் மரனும் ஒரறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப்பிறப்பே

புல்லுக்கும் மரத்திற்கும் அறிவு இருக்கிறது ஆகவே உயிர் இருக்கிறது என பல நூறாயிரமாண்டுகளுக்கு முன்பே கண்டு பிடித்தவன் தமிழன். இதனை யாரும் மறுக்க இயலாது. சுமார் 75 ஆண்டு களுக்கு முன்புதானே நம் இந்தியர் செடிகொடிகளுக்கு உயிர் இருக்கிறது எனும் உண்மையை கண்டு பிடித்து நோபல் பரிசு பெற்றார்

சிலப்பதிகாரம் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று. அந்நூலில் இளங்கோவடிகள் கதையை மாத்திரம் சொல்லவில்லை அந்த நாட்களில் நடந்தவைகள், தான் படித்தவைகள், தான் கேட்டவைகள் முதலியவற்றை தன் காவியத்தில் அங்கங்கே சொல்கிறார்.

நூல்நெறி மரபின் அரங்கம் அளக்கும்
கோல் அளவு இருபத்து நால் விரலாக
எழு கோல் அகலத்து எண்கோல் நீளத்து
ஒரு கோல் உயரத்து உறுப்பினது ஆகி
உத்தரப்பலகையோடு,அரங்கின் பலகை
வைத்த இடைநிலம் நால்கோல்ஆக
ஏற்ற வாயில் இரண்டுடன் பொலியத்
தோற்றிய அரங்கின்---

என மாதவி ஆடிய அரங்கத்தை ஒரு பொறியாளர் போல விவரிக்கிறார். பலகாலம் வழக்கத்தில் அரங்கம் எப்படி அமைக்க வேண்டுமென மரபு இருந்திருக்கிறது. அதன்படி நூல் இயற்றி இருக்கிறார்கள்.ஆகவே நான் துணிந்து கூறுகிறேன் நம் தமிழ் மொழியில் எல்லாவிதமான கருத்துகளை சொல்ல முடியும். விஞ்ஞானமா! பொறியியலா!, கணினியா! அணு விஞ்ஞானமா! எதுவாக இருந்தாலும் தமிழில் சொல்ல முடியும் தமிழில் எழுதவும் முடியும்.

மேற்சொன்ன காரணத்தால்தான் நம் தமிழ் எந்த காலத்திலும் அழியாது, அழிக்கவும் முடியாது.இங்கு ஆடல் அரங்கத்தை வரைபடம் இட்டு காட்டுகிறோம் பாருங்கள்.

திருமூலர்-திருமந்திரம் சைவத்திருமறைகளில் ஒன்று திருமந்திரம் திருமூலர்- 3000 மந்திரங்கள் இயற்றி இருக்கிறார்.அவர் பல நுண்ணிய செய்திகளை விஞ்ஞான கருத்துகளை எடுத்து உரைக்கிறார் அவர் ஒரு அணுவிஞ்ஞானி.

அணுவின்அணுவினை ஆதிப்பிரானை
அணுவின் அணுவிணை ஆயிரங்கூறிட்டு
அணுவில் அணுவை அணுகவல்லார்க்கு
அணுவில் அணுவை அணுகலுமாமே

இரண்டாம் உலகப்போர் காலத்தில் தான் அணுவை பிளக்கமுடியும் என கண்டார்கள் தற்கால விஞ்ஞானிகள். ஆனால் நம் திருமூலர் ஆயிரமாயிம் ஆண்டுகளுக்க்கு முன்பே அணுவை உடைக்கமுடியும் என கண்டார்.அதன் மூலம் வெளியாகும் சக்தி நெருப்பு பிழம்பாக மகாசக்தியாக இருக்கும் என சொன்னார் தம் திருமந்திரத்தில் இதிலிருந்து நம் தமிழ் இலக்கியங்களில் பலப்பல இடங்களில் அறிவியல் விஞ்ஞான கருத்து கள் இருப்பது உண்மையாகிறது.ஆக தமிழில் விஞ்ஞான கருத்துகளை சொல்ல இயலும் எனபதை நீருப்பிக்கமுடிகிறது.

பெரியபுராணம்-சேக்கிழார சேக்கிழார் கண்ணப்ப நயினார் சரித்திரத்தை சொல்லும் போது . ஒரு மருத்துவராக காட்சி அளிக்கிறார். கண்ணப்பநயினார் ஒரு வேடுவர் சிவபக்தி உடையவர்.தான் வணங்கும் சிவலிங்கத்தின் கண்ணிலிருந்து இரத்தம் ஒழுகியது.அதனை நிறுத்த பலவாறு முயற்சி செய்தார் முடியவில்லை.ஒருகாலத்தில் அவர் கேட்டது படித்தது

!! உற்ற நோய் தீர்ப்பது ஊனுக்கு ஊண் -எனும் உரை
முன் கண்டார்.

உடம்பில் ஒரு பகுதி பழுது பட்டால் மற்றொரு பகுதியிலிருந்து சதை எடுத்து வைத்து தைத்தால் காயம் ஆறிவிடும் எனபது இக்கால மருத்துவ நுணுக்கம்.அதனை பிளாஸ்டிக் சர்ஜரி என்கிறது இக்கால மருத்துவம். பன்னெடுங்காலத்துக்கு முன்பே தமிழகத்தில் இந்த மருத்துவ முறையை பயன்படுத்தி இருக்கிறார்கள் தமிழர்கள்.அப்படிபட்ட மருத்துவ நூல்கள் அக்காலத்தில் இருந்திருக்கின்றன

இவ்வாறு இருக்கையில் கணினி செயல்பாடு களை தமிழில் சொல்லமுடியாதா, தமிழில் மென்பொருள் ஆக்க முடியாதா? இவ்வாறு இருக்கையில் கணினி செயல்பாடு களை தமிழில் சொல்லமுடியாதா,தமிழில் மென்பொருள் ஆக்க முடியாதா? முடியும் முடியும் என்ற பதில்தான் வருகிறது.இளைஞர்கள் முன்வரவேண்டும், தமிழில் கணினி பயன் பாட்டினை அதிகமாக்க வேண்டும்.

வெறுங்கை என்பது மூடத்தனம்
விரல்கள் அத்தனையும் மூலதனம் -ஆம்
கணினிக்கு விரல்கள் அத்தனையும் மூலதனம் -ஆம்
கணினிக்கு விரல்கள் அத்தனையும் மூலதனம்.